[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2021 பிப்ரவரி 25

பரிசீலித்தும், 2020–2021 ஆம் கல்வியாண்டில் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அனைவரும் முழு ஆண்டுத் தேர்வுகள் மற்றும் பொதுத் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களுக்கான மதிப்பெண் மதிப்பீட்டு நெறிமுறைகள் அரசினால் விரிவாக வெளியிடப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் வயது அதிகரிப்பு, 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் தமிழகத்தில் வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இன்றும் ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலும் இந்திய நாட்டின் வரலாற்றில் யாருமே செய்திராத சாதனையைப் படைத்திருக்கிறார். அனைவரும் தேர்தல் களத்தில்தான் வாக்குறுதி தருவது வழக்கம். ஆனால், தேர்தலுக்கு முன்பாகவே விவசாயிகளின் கடன்கள் அனைத்தையும் இரத்து செய்து, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரலாற்றைப் படைத்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குக் கோடானு கோடி நன்றியை நாங்கள் அனைவரும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முற்பகல் 11–15

அதேபோல, தற்போதைய சூழ்நிலையில் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் நிலைமைகளை மனதிலே கொண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு அமைந்திருக்கின்றது. மாணவர்களின்

உள்ளங்களில் மட்டுமல்ல; கல்வியாளர்கள், பெற்றோர்களின் உள்ளங்களிலும் மகிழ்ச்சியைத் தருகின்ற நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக கோடானு கோடி நன்றி மலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு விதி 110–ன்கீழ் இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு அறிவிப்புகளும் முத்தான அறிவிப்புகளாக இருக்கின்றன. முதலாவதாக, அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அது அதிகாரிகள் மத்தியிலே, அரசு ஊழியர்கள் மத்தியிலே பெரிய அளவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்ற வகையில், நான் மனதாரப் பாராட்டுகிறேன். இரண்டாவதாக, இந்தக் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவித்திருக்கிறார்கள். கொரோனா பாதிப்பு உள்ள இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் இந்த இரண்டு அறிவிப்புகளையும் மனதார வரவேற்பார்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். அந்த அடிப்படையில், இந்த அவையினுடைய வாழ்த்துகளோடு, என்னுடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,